# வானவில்

VAANAVIL
ISSUE – 21 SEPTEMBER 2012

இதழ் - 21 புரட்டாதி 2012


# தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனவாத அரசியலை விடுத்து பன்மைத்துவ ஜனநாயக அரசியலுக்கு வர வேண்டும்!



இலங்கைத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முன்னொருபோதும் இல்லாத வகையில் இனவாதப் பாதையில் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அதன் பிரச்சாரங்கள் இதற்கொரு எடுத்துக்காட்டு.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த இனவாதப் பிரச்சாரம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து, தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசில் தொடங்கி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன ஊடாகத் தொடர்ந்து, இப்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கரங்களில் வந்து சேர்ந்திருக்கிறது.

இடையில் தமிழ் இனவாத அரசியலின் உச்சக் கட்டமாக, விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாகி, தனித் தமிழ் ஈழத்துக்கான போரையும் 30 ஆண்டுகள் நடாத்திப் பார்த்தாயிற்று. அதன் விளைவாக கிடைத்த பலாபலன், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகளும், அதன் சனத்தொகையில் அரைவாசிப்பேர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாகச் சிதறி, இருந்த தேசிய இனத் தன்மையையும் இழந்ததுதான்.

புலிகளின் கேவலமான அழிவுக்குப் பின்னராவது, தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை தனது கடந்த காலத் தலைமைகளின் தவறான, மலட்டுத்தனமான, வங்குரோத்து அரசியலை மீளாய்வு செய்து புதிய பாதையில் பயணிக்கும் என தமிழ் மக்களில் ஒரு பிரிவினரும், சர்வதேச சமூகத்தின் ஜனநாயக சக்திகளும் எதிர்பார்த்தன. ஆனால் திரிகோணமலையில் பிரபலமான ஐக்கிய தேசியக் கட்சிக் குடும்பத்திலிருந்து வந்த இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, போருக்குப் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்கள் சிந்திய இரத்தம் காய்வதற்கு முன்னரே, தீவிர சிங்கள இனவாதியும், தமிழ் மக்களின் அழிவில் பெரும் பங்கு வகித்தவருமான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரித்ததின் மூலம், தனது வழமையான அசிங்கமான பிற்போக்கு முகத்தை உலகிற்குக் காட்டியது.

இருப்பினும், தொடர்ந்தும் சாதாரண அப்பாவித் தமிழ் மக்களின் இன, மொழி உணர்வுகளைக் கிளறி, அவர்களது வாக்குகளைச் சுலபமாகத் தட்டிப்பறித்து வருகிறது. ஐ.நாவுக்கு அறிவிக்கிறோம், அமெரிக்காவுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம், சர்வதேச சமூகத்துக்கு அறிக்கையிட்டுள்ளோம், இந்தியாவுடன் இரகசியமாகக்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# கட்டாயமாக விசாரிக்கப்படவேண்டிய போர்க்குற்றவாளிகள்

போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதாக, தடுப்புக் காவலில் இருக்கும் முக்கியமான 60 புலி இயக்க உறுப்பினர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு தெளிவான ஆதாரங்கள் இருப்பதாக சட்ட ஆலோசனைக்குழு அறிவித்துள்ளது. இவர்களுக்கு எதிராக அடுத்த சில வாரங்களில் வழக்குத் தாக்குதல் செய்யப்படும் எனவும் இந்தக்குழு தெரிவித்துள்ளது.

இந்த சட்ட ஆலோசனைக்குழுவானது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள், வழக்கு விசாரணையின் இறுதி நடவடிக்கை மற்றும் அடுத்தகட்ட செயற்பாடு என்பவை தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக இலங்கை அரசால் நியமிக்கப்பட்டது.

2009 ஆண்டு மே மாதம் முடிவுற்ற வன்னி இறுதி யுத்தத்தின் போது மாத்திரமே இலங்கையில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதாக இலங்கையின் மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராக பிரச்சாரங்கள் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2006 ஆண்டுக்கும் 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை அரச படைகளுக்கும் புலிகளுக்கும் நிகழ்ந்தது மாத்திரமே போர் என்று வரையறுப்பவர்களும், சடுதியான புலிகளின் அழிவை ஏற்றுக்கொள்ள இயலாதவர்களுமே அரசுக்கு எதிரான போர்க்குற்ற பிரச்சாரங்களின் பின்னணியில் இருப்பவர்கள்.

இந்த பிரச்சாரங்களுக்கெதிராக, தமது படைகளால் போர்க்குற்றங்கள் எதுவும் நிகழ்த்தப்படவில்லை என மறுப்பறிக்கைகள் விடுவதிலே இலங்கை அரசு கவனத்தை செலுத்தி வந்துள்ளது. மூன்று வருடத்தின் பின்னர் இப்போதுதான் ஏதோ விழித்தெழுந்து, தடுப்புக் காவலில் எஞ்சி இருக்கும் புலி உறுப்பினர்களில் போர்க்குற்றம் புரிந்தவர்களும் இருக்கிறார்கள் என்ற செய்தியை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது.

தென்னிலங்கையிலுள்ள எதிர்கட்சி பிரமுகர்களை ஆளும் கட்சிக்கு தாவப்பண்ணும் அரசியல் பாணியிலே, சிறைக்கைதிகளாக இருக்கும் புலிகளையும், புலிப்பிரமுகர்களையும் அணுகலாம் என்ற போக்கே, புலிகளுடனான போர் முடிவுற்ற பின்னரான மகிந்த அரசின் செயற்பாடுகளில் தெரிந்தது. இதற்காக இந்த அரசு கே.பி., தயா மாஸ்டர் போன்றவர்களுக்கு அரைச்சுதந்திரம் வழங்கியும், தடுப்புக் காவலில் இருந்த பல ஆயிரக்கணக்கான புலிகளுக்கு (இக்கைதிகளில் போர்க்குற்றம் புரிந்தவர்களும் இருக்கலாம்) எந்தவித விசாரணையுமின்றி மன்னிப்பு அளித்து விடுதலை செய்தும், புலம்பெயர் புலிப்பிரமுகர்களை விசேடமாக அரச செலவில் இலங்கைக்கு வரவழைத்து இரகசிய சந்திப்புகளையும் நிகழ்த்தியது. மகிந்த அரசின் இந்த அணுகுமுறை, ஜனநாயகச் சூழலில் புலிகளின் அனைத்து மனிதவிரோத செயற்பாடுகளும் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுமென எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியது.

ஆனால் கடந்த யூன் மாதம் இடம்பெற்ற வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற தடுப்புக் காவலிலுள்ள புலிகளுடனான மோதல்களின் பின்னரே இலங்கை அரசு, தடுப்புக் காவலில் எஞ்சியுள்ள புலி உறுப்பினர்கள் மீது வழக்குத் தாக்குதல் செய்யும் யோசனையை வெளியிட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பம், கைத்தொலைபேசிகள் என்பவற்றை பயன்படுத்தி வெளிநாடுகளிலுள்ள புலி ஆதரவாளர்களுடன் தொடர்புகளை பேணியது மற்றும் அவர்களின் ஆலோசனைக்கமைய செயற்பட்டது குறித்த ஆதாரங்களை அரசின் பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு கண்டறிந்துள்ளது.

27.07.1975 யாழ்ப்பாணம் மேயர் துரையப்பாவை சுட்டுக்கொன்றதிலிருந்து புலிகள் பகிரங்கமாக தமது அரசியல் கொலையை ஆரம்பித்தனர். பின்னர் 03.01.1982 இல் யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தில் வைத்து சுந்தரம் கொலை செய்யப்பட்டதிலிருந்து , புலிகள் தமது அரசியல் கொலையை சக போராளி இயக்கங்களுக்கு எதிராகவும் விஸ்தரித்தனர். 30.11.1984 இல் வெலிஓயா பிரதேசத்தில் அமைந்திருந்த டொலர் மற்றும் கென்ற் பண்ணைகளில் வைத்து 62 ஆயுதபாணியற்ற சிங்கள இனத்தவர்களை கொன்றதிலிருந்து ஏனைய இனங்கள் மீதான கொலைகள் புலிகளால் தொடங்கப்பட்டது.

இலங்கை அரசுடனான அல்லது இலங்கை அரச படையுடனான யுத்தம் என்பதற்கு அப்பால் சென்று, புலிகளால் நிகழ்த்தப்பட்ட கொடூரமான அரசியல் கொலைகளையும் ஆயுதபாணியற்ற சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களது மீதான கொலைகளையும் 2009 ஆண்டில் புலிகளை தோற்கடித்த பின்னர் எப்படி மறந்து, மன்னித்து விடுவது?


*

---


**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# கல்வி: வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்



தோழர் மு.கார்த்திகேசன்

சரி பிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துக்கள் சொல்லப்படும் தலைப்புகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகின்றது.

இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும், அத்துடன் எந்த வயது வந்தவனும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன் தான் என்று கருதுவதாலும் இருக்கலாம். இன்று கல்வி சர்வ வியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சில வேளைகளில் மற்றக் காரணமாக இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கருதப்படுவதைப் போன்று கல்வி சர்வ வியாபகமானதா இல்லையா ஏன்பதே. கூடுதலாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வி சர்வ வியாபகமானதாக மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும், ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வளர்ச்சியுறுத்தக்கூடிய நாடு என்று கருதப்படும் இலங்கையை எடுத்துக்கொண்டால், இந்த நாட்டின் எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படிச் செய்திருந்தாலும் கூட, அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படையை, ஆகக் குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கிறார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித் திட்டத்தின் கீழ் இதுதான் நிலையென்றால், கடந்த காலத்தின் நிலைமை என்ன? அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, சனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டும்தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வி இருந்தது.

ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள் தான் கல்வி யாருக்கு என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப்பிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்தைய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தது. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற – கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக்கூடியதான பரந்த வெகுஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம்

என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாகவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்றன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டும்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை அடைவதற்காக ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் ஆகிய சர்வகலாசாலைகளுக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவர். அதேவேளையில் சீனாவில் 'மண்டரீன்ஸ்' எனப்படுபவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படும் அதேவேளையில், கடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒர் ஆடம்பரப் பொருளாக, ஒரு பெருமை தரும் அணிகலனாக இது கருதப்பட்டதா?

இல்லை. இது அதிகாரத்தின் ஒரு கருவி – அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி. உலக ரீதியான வாக்குரிமை, உலக ரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்தபோதும்கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியேயாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கங்களால் பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர்களே. இந்தப் படித்தவர்கள்தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதேல்லாம், தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் யார் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயிகளோ அல்லது அரைகுறைப் படிப்பாளிகளோ அல்ல. வேதங்களை ஓதக்கூடிய, அதன் 'புனிதமான' பொருளைக் கூறக்கூடிய, மந்திரங்களைச் சொல்லக்கூடிய படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அது மட்டுமல்ல, தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக்கூடியவர்களாக இருந்தார்கள்!

'ஸ்கூல்' என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாகக் கல்வி இருந்து வந்துள்ளது என்பது காட்டப்படுகின்றது. ஒய்வு என்று பொருள்படுகின்ற 'ஸ்கொலர்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஒய்வு நேரத்தைக் கொண்டிருக்கக்கூடிய வர்க்கத் தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடமை வர்க்கத்தைத் தவிர வேறு யாருக்கு ஒய்வு நேரம் இருந்தது? சொத்துடைமை வர்க்கம்தான் ஆளும் வர்க்கமாக இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீப காலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்துக்கே உரியது.

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதுடன், மற்றைய வர்க்கங்களுக்கும் கொடுக்கப்பட்டாலும், வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள், தத்துவம் ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை, சர்வ வியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலக நீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடக்கி, ஒடுக்கி, சுரண்டப்படுகின்ற மக்கள், வெகுஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையை அறிந்து கொள்வது அவசியம். இதன்மூலம்தான் மக்களின் சகல பகுதியினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்குமுறையிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழி நடாத்தப்படமலிருக்க முடியும். இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக் கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது.

(இக்கட்டுரையை எழுதிய தோழர் மு.கார்த்திகேசன் இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராவார். அத்துடன் சிறந்த கல்விச் சிந்தனையாளரான அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க....

# கம்போடியாவில் அதிக மக்களைக் கொன்றவர்கள் யார்?

இந்தோ - சீன நாடான கம்போடியாவில், 1975 - 1979 வரையிலான காலகட்டத்தில் பொல் பொட் தலைமையிலான ‘கெமர் றோச்’ ஆட்சி நிலவிய காலத்தில், அதிதீவிர இடதுசாரி நடவடிக்கைகள் காரணமாக, சித்திரவதைகளிலும் பஞ்சத்திலும் சிக்கி சுமார் 20 இலட்சம் (சனத்தொகையில் கால்வாசி) கம்போடிய மக்கள் கொல்லப்பட்டதாக, மேற்கு நாட்டு ஊடகங்கள் கடந்த 30 வருடங்களாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன.

இந்தப் பிரச்சாரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என சில உண்மையறியும் குழுக்கள் தெரிவித்துள்ள போதிலும், கெமர் றோச் ஆட்சியின் தவறான செயற்பாடுகளால் பெருமளவிலான மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையே. அந்தக் காலகட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்த பொல் பொட் மரணித்துவிட்ட போதிலும், அவரது ஆட்சியில் மிக முக்கிய தலைவர்களாக இருந்த நியோன் சியா, கியு சம்பான், ஐயெங் சாரி போன்றோர் தற்போது கம்போடிய அரசால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

பொல் பொட் ஆட்சி பற்றி மேற்கத்தைய ஊடகங்கள் இவ்வாறு பிரச்சாரங்கள் செய்து வருகின்ற அதேவேளையில், 1965 முதல் 1975 வரை இந்த நாட்டை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கா, அங்குள்ள மக்களில் பல இலட்சக்கணக்கானோரை குண்டு வீச்சின் மூலமும், வேறு வழிகளிலும் கொன்று குவித்ததைப் பற்றி இந்த ஊடகங்களில் பெரும்பாலானவை வாய் திறப்பதே இல்லை. உதாரணமாக, அண்மையில் (09-27-2012 கனடாவிலிருந்து வெளிவரும் பிரபல ‘ரொறன்ரோ ஸ்ரார்’ பத்திரிகையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

‘இந்த நாட்டில் (கம்போடியா) சம்பந்தப்பட்டிருந்த அமெரிக்கா எட்டு வருடங்களாக நடாத்திய குண்டுவீச்சுகள் பெரும்பாலும் அறிக்கையிடப்படவில்லை. 1965 முதல் 1973 வரையிலான காலகட்டத்தில் 113,716 இடங்களில், 230,516 விமானத் தாக்குதல்களின் போது, 2.75 மில்லியன் தொன் குண்டுகளை அமெரிக்கப் படைகள் கம்போடியாவில் வீசியுள்ளன. இவை பெரும்பாலும் தலைநகர் பகுதியிலும், அதன் சுற்றுப் புறங்களிலுமே வீசப்பட்டன.’

இவ்வளவு தொகையான இடங்களில், இவ்வளவு தொகையான தடவைகளில், இவ்வளவு தொகையான குண்டுகள் ஒரு சின்னஞ்சிறு தேசத்தில், மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவால் வீசப்பட்டது என்ன வகையான மனித நாகரீகமான செயல் என்ன என்பது ஒருபுறமிருக்க, இந்தக் குண்டுவீச்சுகளின் மூலம் எத்தனை இலட்சம் மக்கள் இறந்திருப்பார்கள் என நினைக்கும்போதே, நெஞ்சம் பதறுகிறது. அதுவும் அமெரிக்காவுக்கும் கம்போடிய மக்களுக்கும் போர் ஆரம்பமான பின்னர், கம்போடியாவின் மொத்த சனத்தொகையான 80 லட்சம் பேரில், சரி அரைவாசியான 40 இலட்சம் மக்கள் கிராமப்புறங்களில் வாழ அஞ்சி, தலைநகர் நொம்பென்னுக்கு இடம் பெயர்ந்து வாழ்ந்த சூழ்நிலையில், அந்தப் பகுதியிலேயே இந்த குண்டு வீச்சுகள் நடைபெற்றது என்பதைப் பார்க்கையில், எவ்வளவு பேரழிவு ஏற்பட்டிருக்கும்?

பொல் பொட் அரசு 20 இலட்சம் மக்களைக் கொன்று குவித்தது என ஒப்பாரி வைக்கும் மேற்கத்தைய ஊடகங்கள், அமெரிக்கக் குண்டு வீச்சினால் மூன்று இந்தோ - சீன நாடுகளிலும் (வியட்நாம், கம்போடியா, லாவோஸ்) 10 ஆண்டுகளாக எத்தனை இலட்சம் மக்கள் மரணித்தார்கள் என்பதையும் வெளியிட்டால், அப்பொழுதுதான் மேற்கத்தைய ஊடகங்களின் பத்திரிகா தர்மத்தைப் பாராட்ட முடியும்.

**– முருகேஸ்**

# ஈரானுக்கு எதிராக கனடிய அரசின் அதிரடி நடவடிக்கை!

ரஸ்யாவில் 2012 செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடைபெற்ற, ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட கனடியப் பிரதமர் ஸ்ரீபன் காபர், ஈரானுடனான இராஜ தந்திர உறவுகளைத் தனது நாடு உடனடியாகத் துண்டித்துக் கொள்வதாக அறிவித்த செயலானது, ஈரானையும் மேற்கு நாடுகள் உட்பட பல நாடுகளையும் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தியுள்ளது.

காபரின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் இருந்த கனடியத் தூதரகம் மூடப்பட்டதுடன், கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் உள்ள ஈரானியத் தூதரகம் 5 நாட்களுக்குள் மூடப்பட்டு அங்கு கடமை புரியும் இராஜதந்திரிகள் அனைவரும் வெளியேற வேண்டும் எனவும் கனடிய அரசால் கோரப்பட்டது.

கனடிய அரசின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு முக்கியமான ஈரானியத் தலைவர்கள் யாரிடமிருந்தும் உடனடியான பிரதிபலிப்புகள் எவையும் வரவில்லை எனினும், ஒரு ஈரானியப் பாராளுமன்ற உறுப்பினர் மட்டும் கனடாவின் இந்த நடவடிக்கைக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என எச்சரிக்கைப் பாணியில் கருத்து வெளியிட்டுள்ளார். சில ஈரானியத் தலைவர்கள் கனடிய அரசின் நடவடிக்கையை ‘புத்திசாலித்தனம் அற்றது’ என விமர்ச்சித்துள்ளனர். அதேவேளை ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கருத்து

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க....

# பர்மிய சமாதான தேவதையின் வேடம் கலைகிறதா?



கடந்த 20 ஆண்டுகளாக பர்மிய நாடு உலகின் கவனத்தை ஈர்த்ததிற்கு ஆங் சான் சூ கீ என்ற பெண்மணி காரணமாக இருந்தார். பர்மாவின் சுதந்திர பிதா எனக் கருதப்படும் இவரது தந்தை இராணுவவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போது சிறுமியாக இருந்த சூ கி, வளர்ந்த பின் தனது நாட்டில் நிலவிய இராணுவ ஒடுக்குமுறைக்கெதிராக ஆவேசமாகக் குரல் கொடுத்தார். அவரது ஜனநாயக மீட்சிக்கான முன்னணி தேர்தலிலும் அமோக வெற்றி பெற்றது. ஆனால் இராணுவம் அவரை ஆட்சி அமைக்க அனுமதிக்காதது மட்டுமின்றி, சுமார் 15 ஆண்டுகாலம் அவரை வீட்டுக் காவலிலும் வைத்தது.

அவரை விடுவிக்கக் கோரியும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிய பர்மிய மக்களும், அரசியல்வாதிகளும் இராணுவ அட்சியாளர்களால் கொல்லப்பட்டனர் அல்லது நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டனர். உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக மற்றும் மனித உரிமை அமைப்புகள் சூ கியை விடுவிக்கக் கோரியும், பர்மாவில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டக் கோரியும் தொடர்ச்சியாகப் போராடியதின் விளைவாக, கடந்த வருடம் சூ கீ விடுதலை செய்யப்பட்டார்.

பர்மாவில் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காகப் போராடியதிற்காக சூ கீக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 'சமாதான தேவதை' என்றும், 'பர்மாவின் காந்தி' என்றும் அவர் புகழப்பட்டார். கனடா போன்ற நாடுகள் அவருக்குக் கௌரவப் பிரஜாவுரிமையும் வழங்கின. முழு முதலாளித்துவ மேற்குலகமும் அவருக்குப் பின்னால் நின்றது.

அவரது கட்சி அண்மையில் பர்மியப் பாராளுமன்றத்துக்கு நடந்த இடைத்தேர்தல்களில் பங்குபற்றுவதற்கும், அவர் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யவும் கூட பர்மாவின் இராணுவ ஆட்சி அனுமதி அளித்தது. பர்மியப் பாராளுமன்றத்துக்கு நடந்த 43 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் அவரது கட்சி 42 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. இராணுவத்துக்குச் சார்பான ஆளும் கட்சி 1 தொகுதியை மட்டுமே வென்றது. இதன் மூலம் பர்மாவின் அடுத்த அரசாங்கம் சூ கீயினுடையது என்பது நிச்சயமாகியுள்ளது.

ஆனாலும் சூ கீயின் ஜனநாயகம், மனித உரிமை என்பனவற்றின் விசுவாசம் அப்பழுக்கற்றதுதானா என்ற கேள்வியை எழுப்பும் சந்தர்ப்பம் ஒன்று பர்மாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

சூ கீயினால் உலகின் கவனத்தை ஈர்த்த பர்மா, இப்பொழுது அந்நாட்டில் வாழும் றொகிங்யா முஸ்லீம் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினையால் உலகின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்துள்ளது. பர்மாவின் பெரும்பான்மை பௌத்த இனத்தவர் இச்சிறுபான்மை முஸ்லீம் இனத்தவர் மீது கடுமையான அடக்குமுறையைக் கைக்கொள்வதால், இந்த மக்கள் பல்லாயிரக்கணக்கில் படகுகளில் ஏறி பங்களாதேஸ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். சுமார் 8 லட்சம் சனத்தொகையைக் கொண்ட இம்மக்களில் 1 லட்சம் பேர் வரையில் அகதிகளாகியுள்ளதாக, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. அப்படிச் செல்பவர்களை பங்களாதேஸ் அரசும் ஏற்க மறுக்கிறது. அதனால் அவர்கள் இப்பொழுது நிர்க்கதியான நிலையில் நாடற்றவர்களாக நிற்கின்றனர்.

இந்த றொகிங்ய முஸ்லீம் மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அப்போது இந்துஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த, தற்போதைய பங்களாதேஸ் நாட்டிலிருந்து பர்மாவில் குடியேறியவர்களாவர். அவர்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு வாழ்ந்து வந்தாலும், அவர்களுக்கு எவ்வித அடிப்படை உரிமைகளும் கிடையாது. அவர்கள் திருமணம் செய்வதென்றால், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுவதென்றால், தமது கிராமங்களைவிட்டு வெளியே செல்வதென்றால், எல்லாவற்றுக்கும் பர்மிய இராணுவ அரசின் அனுமதி தேவை. (இப்படியான கட்டுப்பாடுகள் எதுவும் இலங்கையில் 'சிங்கள ஏகாதிபத்தியத்தின்' ஆட்சியின் கீழ் இருக்கும் 'அப்பாவி' தமிழ் மக்களுக்குக் கிடையாது என்பதை இவ்விடத்தில் தயவு செய்து நினைவு கூரவும்)

அண்மையில் பர்மாவின் மேற்குப்புறத்திலுள்ள றைக்கைன் மாகாணத்திலுள்ள பெரும்பான்மையின பௌத்தர்களுக்கும், சிறுபான்மையின றொகிங்யா முஸ்லீம் மக்களுக்கும் இடையில் பாரிய மோதல் சம்பவங்கள் நிகழ்ந்தன. இருதரப்பும் வாள்கள், ஈட்டிகள், கோடரிகள் என்பவற்றால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டன. அதைத் தொடர்ந்து இரு

மதத்தவர்களுக்கும் இடையில் பெரும் மோதல்கள் வெடித்து, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான முஸ்லீம்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பர்மாவில் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கடுமையான குரல் கொடுத்து, தற்போது பல சலுகைகளைப் பெற்றுக்கொண்டுள்ள மேற்கின் முதலாளித்துவ அரசுகள், பர்மாவில் தற்போது ஒடுக்குமுறைக்குள்ளாகி இருக்கும் முஸ்லீம் மக்கள் பற்றி வாய் திறக்காமல் மௌனம் சாதிக்கின்றன.

மேற்குலக சக்திகள் மட்டுமின்றி, பர்மாவின் சமாதான தேவதை என வர்ணிக்கப்படும் ஆங் சாங் சூ கீயும் இந்தப் பிரச்சினையில் வாய் திறந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக எதையும் கதைக்க மறுக்கிறார். சூ கீக்கு இன்று பெரும்பான்மை பர்மிய பௌத்தர்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை வைத்துப் பார்த்தால், அவர் நினைத்தால் முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆனால் அவர் எதையும் செய்கிறார் இல்லை. அதற்கு ஒரேயொரு காரணம், இப்பொழுது வாய் திறக்காமல் இருந்தால்தான், அடுத்த பொதுத்தேர்தலில் பெரும்பான்மையான பௌத்தர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வரலாம் என்ற எண்ணம்தான். இது முழுக்க முழுக்க கபடத்தனமேயன்றி வேறு எதுவுமல்ல.

சூ கீயின் இந்த மௌனத்தைக்கண்டு, அவரது விடுதலைக்காக பல்லாண்டுகளாக குரல் எழுப்பி வந்த உலகின் பல மனித உரிமை அமைப்புகள் வேதனையும் கண்டனமும் வெளியிட்டுள்ளன. சூ கீ போன்ற முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் போடும் ஜனநாயக, சமாதான, மனித உரிமை வேடங்கள் தமது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டவை தான் என்பதற்கு இது மேலும் ஓர் உதாரணமாகும்.

**– எம்.ஜுனைத்**

---

4ம் பக்கத்தொடர்ச்சி...


ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் பணி புரிந்ததுடன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பனவற்றின் அதிபராகவும் பணியாற்றியவர். 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட அவர் 1977 செப்ரெம்பர் 10ம் திகதி காலமானார். அவர் மறைந்த 35வது ஆண்டு நினைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

இரு பகுதிகளைக் கொண்ட இக்கட்டுரை கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவை வெளியிட்ட 'களனி' காலாண்டு சஞ்சிகையின் முதலாவது இதழில் (1973 ஐப்பசி - மார்கழி) பிரசுரமானது. இக்கட்டுரையின் இரண்டாவது பகுதி 'வானவில்' அக்டோபர் இதழில் பிரசுரமாகும் - ஆசிரிய குழு *

# இலங்கை விஜயத்தின் மூலம் அந்நாடு பற்றிய தவறான எண்ணம் நீங்கியுள்ளது!

**பொதுநலவாய பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவிப்பு!!**

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தான் விஜயம் மேற்கொண்ட பின்னர், அந்நாடு பற்றிய தனது எதிர்மறையான கருத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக, பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வில்லியம் எப்.ஸியா கூறியுள்ளார்.



தன்சானியாவைச் சேர்ந்த கலாநிதி ஸியா மேலும் கூறுகையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலங்கை அரசு எவ்வித புனர்வாழ்வு, பனரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என சர்வதேச ஊடகங்கள் சித்தரித்து வந்துள்ளன. அழிவின் வடுக்களை இப்போதும் காண முடிகின்ற போதிலும், மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பெருமளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலைமை இவ்வாறிருக்க எதுவுமே நடைபெறவில்லை என்ற எதிர்மறையான சித்தரிப்பை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான அனுபவங்களை அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கம் தயாராக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தன்சானியாவைச் சேர்ந்த இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான ஹமட் ரஸிட் மொஹமட் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை சர்தேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரித்தானியாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹூ பெய்லி கூறுகையில், உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் இலங்கை அரசாங்கம் அதிகளவில் முதலீடு செய்துள்ளமை பாராட்டுதலுக்குரியது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை அது பெரிதும் உயர்த்தும் என்றார். *

# பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும்



நீர்வை பொன்னையன்

**மொழிக்கொள்கை**

**'சிங்களம் மட்டும்'** என்ற முதல் குரல் ஐ.தே.கவினது தான். சிங்கள பேரினவாத ஐ.தே.க. தலைவர்கள் பின்பற்றிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றக் கொள்கையே இனப்பிரச்சினைக்கு மூல காரணம். 'சிங்களம் மட்டும் கொள்கையில் பண்டாரநாயக்காவுக்கும் அவரது கட்சிக்கும் எவ்வளவு பங்குண்டோ, அதிலும் பார்க்கக் கூடியளவு பங்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு.

1930களில் சுயபாசை இயக்கம் பிரபல்யம் பெறத் தொடங்கியது. சட்ட சபையில் அலுவல்களை சிங்களத்திலும் தமிழிலும் புரிவதற்கு ஏற்றவாறு நிலையியற் கட்டளைகளை மாற்ற வேண்டுமென்ற பிரேரணையை 1932ம் ஆண்டு ஜீ.கே.டபிள்யு.பெரேரா சட்டசபையில் சமர்ப்பித்தார். இப்பிரேரணைக்கு அதிக உறுப்பினர்களின் ஆதரவு இருந்த போதிலும், நிலையியற் கட்டளைகளை மாற்றுவதற்குத் தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

ஆங்கிலத்தைத் தவிர ஏனைய எல்லாப் பாடங்களையும் இயன்றளவுக்குச் சுயபாசையில் கற்பிப்பதும், கல்வியை சுதந்திரமானதும் கட்டாயமானதுமாக ஆக்குவதுமான கல்விக் கொள்கையின் தேவையை வலியுறுத்தும் தீர்மானமொன்றை 1934ஆம் ஆண்டு வட மாகாண ஆசிரிய சங்கம் நிறைவேற்றியது. அதற்கடுத்த வருடத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் கல்விச் சீர்திருத்தம் பற்றி வெளியிட்ட அறிக்கையில், சுயபாசைக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டுமென வற்புறுத்தப்பட்டிருந்தது.

கீழ் நீதிமன்றங்களில் விசாரணைகளும், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தலும் சிங்களத்திலும் தமிழிலும் இடம்பெற வேண்டுமென்ற பிரேரணையை, பிலிப் குணவர்த்தன 1936 ஜுலை 03ஆம் திகதி சட்டசபையில் சமர்ப்பித்தார். இப்பிரேரணைக்கு ஆதரவாக 34 வாக்குகளும், எதிராக 04 வாக்குகளும் பெற்று பிரேரணை நிறைவேறியது. ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் (அப்பொழுது இலங்கையில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஆட்சி செலுத்தியது - வானவில்) அத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவில்லை.

சிங்களமும் தமிழும் என்ற சுயபாசை இயக்கம் பிரபல்யமாகிக் கொண்டிருந்த நேரத்தில், 'சிங்களம் மட்டும்' என்ற குரலை முதலில் ஒலித்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. 1943 யூன் 22ஆம் திகதி பின்வரும் பிரேரணையை சட்டசபையில் அவர் சமர்ப்பித்தார். சில வருடங்களுக்குள் சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் இலக்குடன் -

(அ) எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களம் கல்வி மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்றும்,
(ஆ) சகல பொதுப் பரீட்சைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக ஆக்கப்பட வேண்டும் என்றும்,
(இ) இச்சபையின் அலுவல்களைச் சிங்களத்தில் ஆற்றுவதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும்,
(ஈ) சிங்களத்தில் மொழி பெயர்ப்பதற்காக வேறு மொழிகளிலுள்ள நூல்களைத் தெரிவு செய்வதற்கும், அந்நூல்களின் மொழிபெயர்ப்பை மேற்கொள்வதற்கும் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்றும்.
(உ) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒர் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென்றும்,
இச்சபை கருதுகிறது.

ஜே.ஆரின் இப்பிரேரணை 1944 மே மாதம் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட போது, சிங்களம் என்பதற்குப் பதிலாக, சிங்களமும் தமிழும் என்ற திருத்தத்தை திரு.வி.நல்லையா முன்மொழிந்தார். இத்திருத்தம் ஆதரவாக 29

வாக்குகளையும், எதிராக 08 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தார்.

'சிங்களம் மட்டும்' என்ற பிரேரணையை வலியுறுத்தினால் தமிழர்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்றும், பிரித்தானிய ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இலங்கையில் தங்குவதற்கு அது காரணமாகிவிடும் என்றும், டி.எஸ்.சேனநாயக்க தனிப்பட்ட முறையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு புத்திமதி கூறியதாலேயே திருத்தத்தை ஆதரிக்க அவர் சம்மதித்தார் என, அரசியல் விமர்சகர் ரீ.டி.எஸ்.டி.திசநாயக்க தனது நூலொன்றில் கூறியிருக்கிறார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1944 மே 24ம் திகதி இவ்விவாதத்தில் ஆற்றிய உரையின் பின்வரும் பகுதி முக்கியமானது.

"சிங்களத்துடன் தமிழும் இந்த நாட்டில் சம நிலையில் வைக்கப்படுமேயானால், முழு உலகிலும் ஐந்து மில்லியன் மக்களால் மாத்திரம் பேசப்படும் சிங்கள மொழி காலப்போக்கில் பாதிப்புக்கு உள்ளாகும் அல்லது முற்றாக அழிந்துவிடும் எனப் பெரிதாக நான் அச்சம் கொண்டிருந்தேன். இந்தியாவில் நாற்பது மில்லியனுக்கு மேற்பட்ட மக்களால் ஆக்கப்படும் இலக்கியத்தின் செல்வாக்கும், தமிழ் சினிமா மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் செல்வாக்கும், இந்த நாட்டில் சிங்கள மொழியின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக இருக்குமென நான் கருதினேன்".

சிங்களமும் தமிழும் என்ற திருத்தத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஏற்று வாக்களித்த போதும், அவரது உரையின் இப்பகுதி தமிழ்மொழி பற்றிய அச்சத்தை சிங்கள மக்களிடம் தோற்றுவிப்பதாக இருந்தது. பிற்காலத்தில் சிங்களத் தீவிரவாதிகள் தங்கள் தனிச் சிங்கள கொள்கையை நியாயப்படுத்தும் தர்க்கமாக ஜே.ஆர். கூறிய காரணங்களையே முன்வைத்தார்கள். அரசியல்வாதிகளுக்குள் 'சிங்களம் மட்டும்' என்ற குரலை முதலில் ஒலித்தவரும், தமிழ்மொழி பற்றிய தேவையற்ற அச்சத்தை சிங்கள மக்களிடம் தோற்றுவித்தவரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே என்பதைப் பலர் மறைக்கப் பார்க்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி 'சிங்களம் மட்டும்' என்ற தீர்மானத்தை 1956 பெப்ரவரி 13ம் திகதி களனியில் நடைபெற்ற அதன் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றியது. 'சிங்களம் மட்டும்' மசோதா பண்டாரநாயக்க அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதை ஆதரித்து வாக்களித்தனர்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 1956ல் ஆட்சி அமைத்ததும், அரச கரும மொழிச் சட்டத்தில் தமிழ் மொழிக்கான பாதுகாப்பையும் உள்ளடக்க விரும்பினார். அந்த வகையில் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் அரசாங்க பாராளுமன்றக் குழுவில் 1956 மே 03ஆம் திகதி முன்வைக்கப்பட்ட போது, சிங்கள கடும் போக்காளர்களால் நிராகரிக்கப்பட்டது. புதிய சட்டமூலம் பாராளுமன்றக் குழுவில் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட போது அதுவும் நிராகரிக்கப்பட்டது. கடுங்கோட்பாட்டாளர்களின் விருப்பத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட மூன்றாவது சட்டமூலமே 1956ஆம் ஆண்டின் 33வது இலக்க அரச கரும மொழிச் சட்டமாக நிறைவேறியது.

பின்னர் 1958ஆம் ஆண்டின் 28வது இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. மே மாதம் 03ஆம் திகதி அரசாங்க பாராளுமன்றக் குழுவில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட பல சரத்துக்கள் இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயார் நிலையில் இருந்த நேரத்தில், அரசாங்கத்துக்குள் தோன்றிய குழப்பமான நிலையினாலும், பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டதாலும் அவை கைவிடப்பட்டன.

டட்லி சேனநாயக்கவின் தலைமையிலான தேசிய அரசாங்கம் 1966ஆம் ஆண்டு நிறைவேற்றிய தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள், 1958ஆம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

## இந்திய பிரஜாவுரிமைச் சட்டமும், மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமையும்

மலையகத்தில் பிரதான தோட்டத் தொழிலாளர்களாக இருந்தவர்கள் இந்திய வம்சாவழித் தமிழர்களே. சகலருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டும், தொழிலாளர்களின் தொழிற்சங்க அமைப்பு உருவாக்கப்படும் வரை (1931), இத்தொழிலாளர்கள் பிரதான சக்தியாக அங்கீகரிக்கப்படவில்லை. 1939ஆம் ஆண்டளவில் லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர்களைப் போராட்ட உணர்வுள்ள தொழிற்சங்க அமைப்பாக அணிதிரட்டி தீவிர வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தியது. இத்தொழிற்சங்க போராட்டங்களுக்கு எதிராக அரசாங்கத்தாலும், தோட்ட முதலாளிகளாலும் வன்முறையும் பலாத்காரமும் பாவிக்கப்பட்டன. 1942இல் லங்கா சமசமாஜக் கட்சி தடை செய்யப்பட்டதுடன், அதன் தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். சில தலைவர்கள் தலைமறைவானார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் 1947இல் இலங்கையில் ஒரு பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டு, லங்கா சமசமாஜக் கட்சி இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வந்தது. 1947இல் நடந்த பொதுத்தேர்தலில்

மலையகத் தொழிலாளர்கள் பெரும் சக்தியாக விளங்கினார்கள். இத்தேர்தலில், பிரதானமாக மத்திய, ஊவா மாகாணங்களில் இலங்கை இந்திய காங்கிரஸ் 07 தொகுதிகளில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அதற்கு அண்மித்த 14 தொகுதிகளில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய பெரும் சக்தியாவும் திகழ்ந்தார்கள்.

**இதைக் கண்டு மிரண்ட ஐ.தே.க. அரசாங்கம் 1948ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது.** இதனால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதுடன், அவர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருந்தவர்கள் அனாதைகளாக ஆக்கப்பட்ட கொடுமை நடந்தேறியுள்ளது. இது ஐ.தே.கவினால் தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்யப்பட்ட மாபெரும் அநீதியாகும்.

## 1977ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் தமிழர்களுக்கு எதிரான வன்முறை

1977 மே மாதம் ஐ.தே.க. அதிகாரத்திற்கு வந்தது. திருவாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பாதுகாப்பு படையினருக்கு ஒருவார கால விடுமுறை வழங்கியதுடன், அப்பொழுது எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டார். இதனால் 30 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

ஆகஸ்ட் மாதத்தில் பொலிசார் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் மேல் வெறியாட்டம் ஆடினார்கள். ஆகஸ்ட் 15 நள்ளிரவு யாழ்.நவீன சந்தையும், பழைய சந்தையும் பொலிசாரால் எரிக்கப்பட்டது. சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவுக்குச் சென்ற நான்கு பொலிசார், நுழைவுக் கட்டணம் செலுத்தாமல் பலவந்தமாக உள்ளே சென்று பொதுமக்களுடன் முறைகேடாக நடந்து கொண்டனர். இதுபற்றி டாக்டர் பிலிப்ஸ் அடுத்த நாள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாடு செய்ததால் ஆத்திரமடைந்த பொலிசார், தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.நகர வீதிகளில் பொதுமக்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர். அதைத் தொடர்ந்து யாழ்.நகரில் பதட்டம் நிலவியது. அடுத்த நாள் 17ஆம் திகதி காலை 11 மணிக்கு யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் தலைமையகத்திற்கு பின்வரும் வானொலிச் செய்தி அனுப்பப்பட்டது.

"இன்று நான்கு இ.போ.ச பஸ்கள் எரிக்கப்பட்டன. யாழ்ப்பாண நாக விகாரை மீது தாக்குதல்கள் நடக்கின்றது. புகையிரதத்தில் வரும் பிரயாணிகளைத் தாக்குவதற்காக ஒரு கூட்டம் புகையிரத நிலையத்தில் கூடி நிற்கிறது. நிலைமை மோசமாக உள்ளது".

இச்செய்தியிலுள்ள எதுவுமே யாழ்ப்பாணத்தில் நடக்கவில்லை. அத்தனையும் பொய். பொலிசாரின் அத்துமீறல்களை நியாயப்படுத்துவதற்காக இந்தச் செய்தியை யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்தே வானொலிச் செய்தியாக அனுப்பியிருந்தார்கள். இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஐ.தே.க அரசாங்கத்தால் தமிழருக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர். உத்தியோகபூர்வ அறிக்கையின்படி 112 தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் உண்மையில் இத்தொகையிலும் மூன்று மடங்குக்கு மேல் தமிழர்கள் கொல்லப்பட்டதாக அறியக் கிடக்கின்றது. அத்துடன் 35,000 தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இந்தப் பொலிசார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தபடியால்தான், இந்த நிலைமை ஏற்பட்டதென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன 'விளக்கம்' கொடுத்தார். பொலிஸ் படை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விசுவாசமாக இருந்திருந்தால், அதற்கு முந்திய வாரத்தில் அக்கட்சி ஆதரவாளர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டு 30 பேர் வரை கொல்லப்பட்ட போது, ஏன் அவர்களுக்குப் பொலிசாரினால் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. எனவே ஜே.ஆர். அவர்களால் கொடுக்கப்பட்ட தகவல் பொய்யானது என்பது வெளிச்சம்.

அடுத்த இதழிலும் தொடரும்...

(82 அகவையுடைய நீர்வை பொன்னையன் இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். இலக்கியம் மட்டுமின்றி, இடதுசாரி அரசியல், தொழிற்சங்கத்துறை என்பனவற்றிலும் ஆழக் கால் பதித்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முக்கிய நிர்வாகிகளில் ஒருவராகச் செயலாற்றிய அவர், தமிழ் தேசியவாத அலையில் அள்ளுப்பட்டுப் போன சில 'முற்போக்குகள்' போலல்லாது, கொண்ட கொள்கையில் நிலை தளும்பாது உறுதியாக நிற்பதுடன், தற்பொழுது சுறுசுறுப்பாக இயங்கி வரும் 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்ற'த்தின் இணைப்பாளராகப் பணி புரிகிறார். அம்மன்றம் தொடர்ச்சியாக வெளியீட்டு வரும் 'சிந்தனை வெளியீடு' தொடரின் 7ஆவது வெளியீட்டிலிருந்து இக்கட்டுரைத் தொடர் நன்றியுடன் பிரசுரிக்கப்படுகின்றது)

*


# கனடிய பாராளுமன்ற உறுப்பினரின் கூற்றால் உற்சாகமடைந்துள்ள புலி சார்பு ஊடகங்கள்!

கடந்த மார்ச் மாதம் இலங்கையில் நிலவும் நிலவரங்களைக் கண்டறிவதற்காகச் சென்ற கனடியப் பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகித்த, ஆளும் கொன்சவேட்டிக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ் அலெக்சாண்டர், சுமார் 6 மாதங்கள் கழித்து, அண்மையில் இலங்கை நிலவரங்கள் குறித்து ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிக்கப்பட விடயங்களை, புலி சார்பு கனடியத் தமிழ் ஊடகங்கள் கொட்டை எழுத்துகளில் தலைப்புச் செய்திகளாகப் போட்டு மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நடாத்துகின்றன.

போர் முடிவுற்று 3 வருடங்கள் ஆன பின்பும், இலங்கையில் எவ்விதமான முன்னேற்றங்களோ, மாற்றங்களோ ஏற்படவில்லை என, கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதாக, அவை ஒரே போடாய்ப் போட்டுள்ளன. 'உலகத் தமிழர்' போன்ற பத்திரிகைகள் அவரது பேட்டி குறித்து ஆரவாரமாக ஆசிரிய தலையங்கம் தீட்டியிருப்புதுடன், கனடிய அரசாங்கம் இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருப்பது போலவும், குறிப்பிட்ட சில விடயங்களில் கனடிய அரசு எதிர்பார்ப்பது போன்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கத் தவறினால், இலங்கை அரசு தப்பிப் பிழைப்பதே கஸ்டம் எனும் மிரட்டும் தொனியிலும் எழுதி, புலம்பெயர் தமிழனின் தலையில் வழமைபோல மிளகாய் அரைத்திருக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் அலெக்சாண்டர் அவர்கள்; இலங்கை சம்பந்தமாகப் பல விமர்சனங்களை முன் வைத்திருந்தாலும், போருக்குப் பின்னர் ஓரளவு இயல்பு நிலை திரும்பியுள்ளதை ஒப்புக் கொண்டுள்ள அவர், பூரணமான இயல்பு நிலை ஏற்பட நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். கொந்தளிப்புகள் நிகழ்ந்த பல நாடுகளில் இராஜதந்திரியாகப் பணி புரிந்த அலெக்சாண்டருக்கு, 30 வருடப் போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்த ஒரு நாட்டின் முன்னால் உள்ள பாரிய சவால்கள் என்னவென்பதை விளங்கிக் கொள்வது அவ்வளவு சிரமமானதல்ல.

இலங்கை அரசாங்கம் நியமித்த உண்மையைக் கண்டறியும் குழுவின் அறிக்கை உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பது, அலெக்சாண்டரின் பிரதான முறைப்பாடுகளில் ஒன்றாகும். அதில் ஓரளவு உண்மை இருப்பினும், இலங்கை அரசு உள்நாட்டு மோதல்கள் நிகழ்ந்த உலக நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில்; போர் முடிவுற்ற 3 வருடங்களில் சாதித்தவை பெரும் சாதனைகள் என்றுதான் சொல்ல வேண்டும்.




இறுதிக்கட்டப் போரின் உடன் விளைவாக இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்களை அரசாங்கம் வெற்றிகரமாக மீளக் குடியமர்த்தியதை எவரும் லேசாக குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. பெரும் வல்லரசு நாடுகளே தமது நாடுகளில் ஏற்பட்ட சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை, வருடங்கள் பல கடந்தும் ஆற்ற முடியாமல் தவிப்பதை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அத்துடன் அரசாங்கம் 3 வருடங்களில் மேற்கொண்ட பாரிய வீதி அபிவிருத்தி, மின்சாரமயமாக்கல், உட்கட்டமைப்பு வசதிகள், பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்பியமை, அரசாங்க

செயலகங்கள், நீதிமன்றங்கள், வைத்தியசாலைகளை புதிதாக அல்லது மீளமைத்தமை, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், விவசாயத்தை ஊக்குவித்தமை, நீர்ப்பாசனக் குளங்களை புனரமைத்தமை, கிராமப்புறங்களில் வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்தமை, பொலிஸ் சேவையில் தமிழர்களை உள் வாங்கியமை, போக்குவரத்து சேவைகளை விரிவாக்கியமை என மக்களுக்கு அவசியமான, பல நல்ல விடயங்களை நிவேற்றி வருகின்றமை உள் நோக்கமுள்ள விமர்சகர்களின் கண்களுக்குத் தெரிய மறுப்பது ஒன்றும் விந்தையான விடயமல்ல.

இவைகளைப் பற்றி எதுவும் கூறாத கனடியப் பாராளுமன்ற உறுப்பினர், மனித உரிமை மீறல்கள் பற்றி மட்டும் பேசுவது ஒருபக்கப் பார்வையாகும். அதை சம நிலையான ஒரு பார்வை என்று சொல்ல முடியாது. அதுமட்டுமின்றி, கனடாவின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளும், இலங்கையின் நிலைமைகளும் வெவ்வேறானவை. உலகின் ஒவ்வொரு நாடும் தமது தனித்தன்மையான நிலைமைகளைக் கொண்டுள்ளன. கனடியக் பெறுமானங்களின் அடிப்படையில் இலங்கையின் நிலைமைகளை மதிப்பீடு செய்வதும் சரியானதல்ல.

அண்மைக் காலங்களில் இலங்கையின் நெருங்கிய அயலக நட்புநாடான இந்தியாவின் தலைவர்கள் உட்பட, பல உலக நாடுகளின் தலைவர்களும், இராஜதந்திரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அதேபோல பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமும், அதன் பாராளுமன்றச் சங்கத்தின் செயலாளரும் கூட இலங்கைக்குச் சென்று வந்துள்ளனர். இவர்கள் எல்லோருமே இலங்கை, போர் முடிவுற்ற பின்னர் மேற்கொண்ட பல்துறை அபிவிருத்திகளையும், விதந்து பாராட்டியிருப்பதுடன், அவற்றை ஏனைய நாடுகள் முன்மாதியாகக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எது எப்படியிருந்த போதிலும், இலங்கையில் வாழுகின்ற மக்களும், ஏன் போரினால் இடம் பெயர்ந்து புலம்பெயர் நாடுகளில் வாழும் இலங்கை மக்களும், தமது நாட்டில் நடைபெறுபவை குறித்து என்ன கருதுகிறார்கள் என்பதே முக்கியமானது.

அப்படிப் பார்க்கையில், போர் நடைபெற்ற காலத்தில் அரசாங்கப் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு அஞ்சியும், புலிகளின் ஆட்கடத்தல், கப்பம் கோருதல் போன்றவற்றுக்கு அஞ்சியும், இலங்கைக்கு செல்வதற்கு பயந்திருந்த புலம்பெயர் இலங்கையர்கள், போர் முடிவுற்ற பின்னர் வருடாவருடம் இலங்கைக்கு பெருந்தொகையில் மகிழ்ச்சியுடன் சென்று வருகின்றனர்.

அண்மையில் வெளியான ஒரு புள்ளிவிபரத்தின்படி, போர் முடிவுற்ற பின்னர் கடந்த 3 வருடங்களில் சராசரியாக வருடமொன்றுக்கு ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இலங்கைக்குச் சென்று வந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்பதுடன், கணிசமானவர்கள் கனடியத் தமிழர்கள் ஆவர்.




அப்படிச் சென்று வருபவர்கள் முன்னைய காலங்கள் போலல்லாது, இலங்கையின் எந்தப் பாகத்துக்கும் எந்த நேரத்திலும் பயமின்றிச் சென்று வந்த தமது அனுபவங்களையும் கூறுகின்றனர். குறைபாடுகள் பல இருப்பினும், ஆயுதப்படைகளாலோ, அரசாங்க அதிகாரிகளாலோ தாம் துன்புறுத்தப்படவில்லை என்பது மட்டுமின்றி, அவமரியாதையாகத்தன்னும் நடத்தப்படவில்லை என்றே கூறுகின்றனர்.

சாதாரண பொதுமக்களின் இக்கூற்றுக்கள், கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ் அலெக்சாண்டரின் பார்வையுடன் முரண்படுவது கூட, கனடாவின் ஜனநாயகச் சிறப்பின் ஒரு அம்சமெனக் கொள்ள முடியும். அது இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களில் ஒன்றுமாகும்.

**– சிவம்**

*

# இலங்கைக்கு எதிரான தமிழக அரசியல்வாதிகளின் செயல்களுக்கு 'கல்கி' இதழ் கண்டனம்!

மீண்டும் இலங்கைத் தமிழர் கரிசன கண்ணாமூச்சி தமிழக அரசியல் தலைவர்களிடையே வளையவரத் தொடங்கியிருக்கிறது. ஏற்கெனவே தமிழக மண்ணில், இலங்கை வீரர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடாது என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்க, அவ்வீரர்கள் பெங்களூருவுக்கு மாற்றப்பட்டனர். நீலகிரி ராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற வந்துள்ள இலங்கை வீரர்கள் திரும்ப அனுப்பப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார் ஜெயலலிதா.

நேசநாடுகளின் இராணுவங்களோடு போர் ஒத்திகையில் ஈடுபடுவதும், பயிற்சிகளுக்காக பரஸ்பரம் வீரர்களை அனுப்பி வைப்பதும் பல ஆண்டுகாலப் பழக்கம். இலங்கை வீரர்கள் இங்கு பயிற்சி பெற வந்திருப்பதும் இது போன்றதே. இலங்கை, இந்தியாவுக்கு என்றுமே பாதகாப்புச் சவாலைக் கையிலேந்தி நிற்கும் நாடு. சீனா, இந்தியத் தலைமேல் இருக்கும் திபெத்தை வளைத்துவிட்டது. கால் பக்கம் இருக்கும் கொழும்பு, அதன் கழுகுக் கண்களுக்குத் தப்பாது. தன் தொல்லை எல்லையை விரிவுபடுத்த, சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கிறது பாகிஸ்தான். இந்நிலையில், இலங்கையோடு இணக்கம் பாராட்டுவது இந்தியப் பாதுகாப்புக்கு அதிஅவசியம்.

இலங்கைத் தமிழர்கள் படும் துன்பங்களைக் களைவது என்பது வேறு, பாதுகாப்புக்குத் தேவையான நேச உறவைப் பேணுவது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்வதால், அவநம்பிக்கை அதிகரிக்கும். மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடுகிறது என்று குற்றம் சுமத்தும் ஜெயலலிதா, தம் கடிதங்கள் மூலம் மத்திய அரசின் உரிமைகளில் தலையிடுகிறார். உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வது என்பதற்கும், அதை பகிரங்கப்படுத்தி பிடிவாதமாக சாதிப்பதற்கும் வேறுபாடு உண்டு.

கருணாநிதியோ, இலங்கைத் தமிழர் மத்தியில் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்கவும், தனி ஈழம் என்ற எண்ணத்தோடும், முதலில் டெசோ மாநாட்டை கையிலெடுத்தார். மத்திய அரசின் தலையீட்டை ஒட்டி, "தனி ஈழத்துக்காக போராட்டம் நடத்தும் எண்ணம் இப்போது இல்லை" என்று உண்மை நிலை புரிந்துகொண்டு பேசியிருப்பவர் கூடவே, " தனி ஈழம் ஒரு காலத்தில் அமையலாம்" என்றும் இரட்டை நிலை எடுக்கிறார். தனி ஈழ கோரிக்கையை இன்று இலங்கையில் இருக்கும் தமிழ் எம்.பிக்களோ, மக்களோ கூட விரும்பவில்லை என்பதே உண்மை. இலங்கைக்குள், கூடுதல் அதிகாரங்களுடன், சுயாட்சியுடன் கூடிய சுகமான வாழ்வே அவர்கள் கோரிக்கை.

பேரறிஞர் அண்ணா, இந்திய ஒற்றுமையின் உன்னதத்தை உணர்ந்து கொண்டு, தனித் தமிழ்நாடு கோரிக்கையை பகிரங்கமாகக் கைவிட்டது போல், கலைஞரும் தனி ஈழ எண்ணத்தைக் கைவிட வேண்டும். தேவையற்ற இரட்டை நிலை, தொண்டர்களிடையே குழப்பத்தையும் சந்தேகத்தையும் மக்களிடையே அதிருப்தியையுமே ஏற்படுத்தும்.

இலங்கைத் தமிழர்கள் வாழ்நிலை மேம்பட கையாள வேண்டிய சாணக்கியம் வேறு. அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு, தலைநிமிர்ந்து தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதை வைத்துக் கூடுதல் புள்ளிகள் பெற முயலும் குறுகிய நோக்கம் மலினமானது, கொச்சையானது, அதனாலேயே கண்டிக்கத்தக்கது.

(தமிழகத்தின் பிரபலமான பழம்பெரும் 'கல்கி' வார இதழில் 2012 ஜூலை 29ம் திகதி வெளியிட்ட ஆசிரிய தலையங்கமே மேலே தரப்பட்டுள்ளது. இந்தத் தலையங்கம் தமிழகத்திற்கு மத யாத்திரை சென்ற இலங்கையர்கள் அங்குள்ள தமிழ் இனவெறிக் கும்பலால் தாக்கப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்டதாகும்.
இத்தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ள வழமையான இந்திய ஊடகங்களின் சீன விரோத, பாகிஸ்தான் விரோதப் பூச்சாண்டியை விடுத்துப் பார்த்தால், தமிழகத்தில் நிதான புத்தியுடன் சிந்திப்பவர்களும் கணிசமாக இருக்கிறார்கள் என்ற உண்மை புலனாகும்) *

---

5ம் பக்கத்தொடர்ச்சி...

வெளியிடுகையில், காபர் அரசு விரோத மனப்பான்மையுடனும்,இனப் பாகுபாட்டுடனும் செயற்படுவதாக குற்றம்சாட்டியதாக, ஈரானின் மெஹ்ர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என, அதன் பரம வைரியான இஸ்ரேலும், அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும் குற்றம்சாட்டி வரும் நிலையில், கனடாவின் இந்தத் திடீர் அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஈரானின் அதிகரித்து வரும் தீய போக்குக் காரணமாகவே அதனுடனான இராஜ தந்திரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக, பிரதமர் ஸ்ரீபன் காபர் தெரிவித்துள்ளார். ஸ்ரீபன் காபர் அரசு வெளிப்படையாகவும் உறுதியாகவும் இஸ்ரேலிய அரசை ஆதரித்து வருவது எல்லோரும் அறிந்த விடயம் என்ற போதிலும், அதன் கூட்டாளி நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா என்பனவற்றை முந்திக்கொண்டு கனடிய அரசு செயற்பட்டிருப்பதானது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடிய அரசின் இந்த நடவடிக்கையை, இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு வெகுவாகப் பாராட்டி வரவேற்றுள்ளதுடன், கனடிய அரசின் இந்த முன்மாதிரியை ஏனைய சர்வதேச சமூகமும் பின்பற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் ஈரான் நிச்சயமாக அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கக்கூடாது எனவும் கூறியுள்ளார்.

ஸ்ரீபன் காபர் அரசின் இந்த நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட கனடிய எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் வெளிவிவகார விமர்சகர் போல் டிவோர், 'ஈரானிலுள்ள கனடியத் தூதரகத்தை மூடியதின் மூலம், மத்திய கிழக்கில் கனடா வகித்து வந்த முக்கியமான பாத்திரத்திலிருந்து அது நீக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.
இதற்கிடையில் கனடிய அரசின் இந்த நடவடிக்கையால், ஈரானிய சிறைகளில், அங்கு உளவு பார்த்த குற்றச்சாட்டுகளுக்காகவும், வேறு குற்றங்களுக்காகவும் வைக்கப்பட்டிருக்கும் 3 கனடியப் பிரஜைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்ற அச்சமும் மேலோங்கியுள்ளது.

– கணேஸ்

முன்பக்கத்தொடர்ச்சி.....

கலந்தாலோசித்துள்ளோம் போன்ற, மோசடித்தனமான கதைகளைத் தமிழ் மக்களுக்குக் கூறி, தனது அரசியல் பிழைப்பை அது நடாத்தி வருகின்றது.

தமிழ் மக்களின் 'தானைத் தலைவர்களான' ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம் போன்றவர்கள் இந்தியத் தலைவர்களுக்கும், சர்வதேசத் தலைவர்களுக்கும் சொல்லாததையா, தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் சொல்லப் போகிறார்கள்? அல்லது முப்படைகளையும், நவீன ஆயுதங்களையும் கொண்டு போரிட்ட பிரபாகரன் சாதிக்க முடியாததையா சிறு துரும்பைத் தன்னும் போட லாயக்கற்ற இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை செய்யப் போகின்றது?

தாம் செய்வது தமிழ் மக்களுக்குத் துரோகம் என்று தெரிந்துகொண்டே, கூட்டமைப்புத் தலைமை இந்த கிரிமினல் இழி செயலில் ஈடுபடுகின்றது. இதனால் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஏற்படப்போகும் பாரிய அழிவுகள் இவர்களுக்குத் தெரியாததல்ல. இருந்தும் அரசியலில் தமது இருப்பைப் பாதுகாக்கவும், அதனால் வரக்கூடிய வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்காகவும், திட்டமிட்ட முறையில் இந்த நாசகார அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

'மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர்களது உரிமையை மறுக்கையில், போராடுவதைத் தவிர எமக்கு வேறு என்ன வழி இருக்கிறது?' என, தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை தமது செயல்களுக்கு நியாயம் பேசலாம். உண்மைதான், சிங்களப் பேரினவாத அரசுகள் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை மட்டுமல்ல, முஸ்லீம் மக்களின் உரிமைகளையும், இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளையும் கூட வழங்க மறுத்தே வந்துள்ளன.

இலங்கையின் சனத்தொகையில் 74 வீதம் சிங்கள மக்கள் என்பதை தமிழ் தலைமைகள் எப்பொழுதுமே மறந்துவிடுகின்றன. எஞ்சிய 28 வீதத்தில் இலங்கைத் தமிழர்கள் 12 வீதமாகவும், முஸ்லீம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் தலா 8 வீதமாகவும் இருக்கின்றனர். ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியினர் தமது தலைவர் செல்வநாயகத்தை 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவர் என வர்ணித்துப் பெருமைப்பட்டனர். அதாவது இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமின்றி, முஸ்லீம், மலையக மக்களுக்கும் அவர்தான் தான் தலைவர் எனச் சுய பிரகடனம் செய்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய போது செல்வநாயகத்துடன், ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையும், மலையக மக்களின் தலைவர் சௌமியமூர்த்தி எஸ்.தொண்டமானையும், கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவென ஐ.தே.கவிலிருந்து கடன் வாங்கிய கே.டபிள்.யூ.தேவநாயத்தையும், இணைத் தலைவர்களாக அறிவித்தனர். ஆனால் செல்வநாயகத்தைத் தவிர மற்றையவர்கள் யாருமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் எந்தவொரு கூட்டத்திலும் ஒருபோதும் பங்குபற்றவில்லை என்பதுதான் வரலாறு. பின்னர் கிழக்குத் தமிழர்களும் முதலில் செ.இராசதுரை தலைமையிலும், பின்னர் கருணா, பிள்ளையான் தலைமையிலும் தனிவழி போக ஆரம்பித்துவிட்டனர்.

முஸ்லீம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் தமது சொந்தத் தலைமைகளை உருவாக்கியது மட்டுமின்றி, தமது சொந்த அரசியல் வழிமுறைகளையும் உருவாக்கித் தமது இனத்துக்காக ஓரளவு நன்மைகளையும் செய்துள்ளார்கள். அவர்கள் இலங்கைத் தமிழ் தலைமைகள் செய்தது போன்று சர்வசதா இனவாத எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கவில்லை. பெரும்பான்மை சிங்கள இனத் தலைமைகளுடன் இணக்க அரசியலை மேற்கொண்டு, தந்திரோபாயரீதியாகப் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள். அதிலிருந்து கூட தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை பாடம் கற்றுக்கொண்டதாக இல்லை.

எதிர்ப்பு அரசியலைக்கூட சரியாக மேற்கொண்டார்கள் என்றால் அதுவும் இல்லை. ஐ.தே.க ஆட்சிபீடத்தில் இருந்தால், அந்த ஆட்சிக்கு எதிராக எந்தப் போராட்டத்தையும் நடாத்தமாட்டார்கள், (1965இல் ஐ.தே.க ஆட்சியில் தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்தன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றவர்களுடன் இணைந்து ஆட்சியிலும் பங்கேற்றார்கள்) சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் ஆட்சிக்கு வந்தால், ஐ.தே.கவுடன் கூட்டு வைத்துக்கொண்டு அவ்வரசுகளுக்கு எதிராக 'இன விடுதலை'ப் போராட்டம் நடாத்துவார்கள்.

சுதந்திரத்துக்குப் பின்னர் முதலாவது ஆட்சியை அமைத்த அப்போதைய ஐ.தே.க தலைவர் ஏ.எஸ்.சேனநாயக்க, (இலங்கை – இந்திய) தமிழர்களுக்கு எதிரான பாரபட்சத்தை ஆரம்பித்து வைத்தார். (மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கிய போது, அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதை ஆதரித்து வாக்களித்தார்) அதையும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசுகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளையும், அன்று சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இருந்த இடதுசாரிக் கட்சிகள் தீவிரமாக எதிர்த்தன. அந்த எதிர்ப்பைத் தமிழ்

தலைமைகள் நன்கு பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வழிவகுத்திருக்க முடியும். ஆனால் தமிழ் தலைமைகள் என்ன செய்தன? சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகத்தைத் தூண்டும் வகையில் ஐம்பதுக்கு ஐம்பது, சமஸ்டி, தமிழரசு, தனித்தமிழீழம் என தவறான கோசங்களை முன்வைத்து, இரு இனங்களுக்கிடையிலும் சந்தேகத்தை வளர்த்து, இன்று தீர்க்க முடியாத பிளவாக அதை உருவாக்கி விட்டுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்கள் விரோத நாசகார அரசியலுக்கு ஒரு சமீபத்திய உதாரணம், நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலாகும். தமிழ் மக்களில் 90 வீதம் பேர் தமக்கு வாக்களித்தால், கிழக்கு மாகாணசபையில் தம்மால் தனித்து ஆட்சியமைக்க முடியும் என முதலில் சம்பந்தன் அறிக்கை விடுத்தார். (ஆனால் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்த நிறுவனம் ஒன்று கிழக்குத் தமிழர்களில் 50 வீதமானோரே தமிழ் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது) பின்னர் முஸ்லீம் காங்கிரசுடன் சேர்ந்து ஆட்சியமைக்கப் போவதாகச் சொன்னார். அதன் பின்னர் ஐ.தே.கவுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கப்படும் என்றார்.

ஆனால் அதேநேரத்தில், அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் எவரையும் வெற்றிபெற வைக்கக்கூடாது எனத் தமிழ் மக்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் திரும்பத் திரும்ப அறிக்கையும் விடுத்தனர். (ஐ.தே.க மட்டும் அவர்களது பார்வையில் தமிழ் கட்சி போலும்) அவர்கள் விருப்பம் போல அவர்களால் தனித்தோ, முஸ்லீம் காங்கிரஸ், ஐ.தே.க போன்றனவற்றுடனோ சேர்ந்து ஆட்சி அமைக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் அவர்கள் விரும்பிய, 'தமக்கு மூக்குப் போனாலும், எதிரிக்குச் சகுனப் பிழையாக வரவேண்டும்' என்பதற்கிணங்க , அரசாங்கத் தரப்பில் போட்டியிட்ட தமிழர்களில் ஒருவரைத் தவிர (முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்) ஏனையோர் தோல்வி அடைந்தனர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய கிழக்கு மாகாணசபை அமைச்சரவையில் தமிழர் எவருமே இடம்பெறவில்லை. முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் கௌரவப் பிரச்சினை காரணமாக அமைச்சரவையில் இடம்பெற மறுத்திருக்கலாம். ஆனால் அமைச்சரவையில் வேறு தமிழ் அமைச்சர்களாவது இடம்பெற முடியாதவாறு தமிழ் வேட்பாளர்களைத் தோற்கடித்து, தமிழ் மக்களின் தலையில் மண்ணை அள்ளிப்போட்ட பெருமை தமிழ் தேசியக் கூட்டமைப்பையே சாரும்.

இதிலிருந்து தெரிவது ஒன்றுதான். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களைத் தவிர, தமது சொந்த நலன்களுக்காகவும், புலம்பெயர் புலித் தமிழர்களின் தேவைகளுக்காகவும், தமது வர்க்க சகாவான ஐ.தே.கவின் அரசியல் தேவைகளுக்காகவும், வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளின் அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் தான் செயற்படுகின்றது என்பதே அதுவாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உண்மையில் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படுவதாக இருந்தால், இந்தத் தவறான நாசகாரக் கொள்கைகளிலிருந்து விடுபட்டு, ஆக்கபூர்வமான புதிய பாதையில் பயணிக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாமல் செக்குமாடுகள் போல், பழைய பாதையில் சுற்றிச்சுற்றி வந்தால், மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டுத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய புதிய தலைமையொன்றை உருவாக்க முன்வர வேண்டும். இதைத்தவிர தமிழ் மக்களுக்கு முன்னால் வேறு தெரிவுகள் எதுவும் இல்லை. *

# இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கனடா கலந்து கொள்ள வேண்டும்!

### செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா வேண்டுகோள்

**இ**லங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் 2009 மே மாதத்தில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் போது, இலங்கை அரச படைகள் இழைத்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு தீர்வு காணத் தவறின், 2013ல் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய (கொமன்வெல்த்) நாடுகளின் உச்சி மாநாட்டில் கனடா கலந்து கொள்வது சாத்தியமில்லை என கனடியப் பிரதமர் கடந்த வருடம் அறிவித்திருந்தார். கனடாவின் இந்த முடிவை அந்நாடு கைவிட வேண்டும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா கேட்டிருக்கிறார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் 54வது கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு செப்ரெம்பர் (2012) முற்பகுதியில் இலங்கை சென்றிருந்த கமலேஸ் சர்மா, அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும், இதர தலைவர்களையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய உண்மையான நிலைமைகளைக் கேட்டறிந்த பின்னரே கனடிய அரசாங்கத்துக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். அத்துடன் இலங்கை – கனடிய அரசுகளுக்கிடையில் இவ்விடயம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் பெரும்பாலும் கனடா கலந்து கொள்ளும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட கனடா, 2012ல் இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டை மாற்றும்படி கேட்டிருந்தது. கனடாவின் கோரிக்கையை 54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் ஏனைய நாடுகள் நிராகரித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. *

# எமது அரசாங்கத்தில் எவ்வளவோ இனவாதிகள் உள்ளனர்! ஆனால் கிழக்கு தேர்தலில் அரசாங்கம் இனவாத பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை!

## – ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச

அண்மையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பிலுள்ள அலரிமாளிகைக்கு அழைத்து சந்திப்பொன்றை நிகழ்த்தியிருந்தா. அந்த சந்திப்பின் போது, ஜனாதிபதியிடம் ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து பல கேள்விகளை எழுப்பினர்.

அக்கேள்விகளில் அண்மையில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் காங்கிரஸ், அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி என்பனவும் இனவாத பிரச்சாரத்தில் ஈடுபட்டது குறித்தும் வினாக்கள் எழுப்பப்பட்டன.

அக்கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் ஜனாதிபதி மகிந்த பின்வருமாறு கூறியுள்ளார்:

"கிழக்கு மாகாணசபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இனவாத பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை. எமது கூட்டமைப்பில் இன வேறுபாடின்றி தமிழ், முஸ்லீம், சிங்கள வேட்பாளர்கள் இடம் பெற்றிருந்தனர். இதில் 7 முஸ்லீம்கள் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முஸ்லீம் காங்கிரசிலும் 7 உறுப்பினர்களே தெரிவாகியுள்ளனர். இனவாதத்தைப் பரப்ப வேண்டாம் என நான் எனது தரப்பினரிடம் பணிப்புரை விடுத்திருந்தேன். முஸ்லீம் காங்கிரஸ் இனவாதத்தை பரப்பி பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தது. முஸ்லீம் காங்கிரஸ் மட்டுமல்ல, தேசிய சுதந்திர முன்னணியும் அவ்வாறான பிரச்சாரத்திலேயே ஈடுபட்டிருந்தது.

முஸ்லீம் காங்கிரஸ் மத்திய அரசாங்கத்தில் எமது பங்காளி கட்சியாகவே உள்ளது. எமது அரசாங்கத்தில் எவ்வளவோ இனவாதிகள் உள்ளனர். எமது அமைச்சரவைக்கு நீங்கள் வந்து பார்த்தீர்களானால், எவ்வளவு இனவாதிகள் எமது பக்கத்தில் உள்ளனர் என்பதை அறிய முடியும். ஆனால் எல்லோரும் மகிந்த சிந்தனையை ஏற்றுத்தான் அரசாங்கத்தில் உள்ளனர். அதற்கு வெளியில் எவரும் செல்ல முடியாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்முடன் இணைய முடியும். எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. யாரும் வரலாம். யாரும் போகலாம். ஆனால் தமிழ் கூட்டமைப்பினர் இனவாதத்தை விட்டுவிட்டு வர வேண்டும்". *

# கூடங்குள அணு உலையால் இலங்கைக்கும் அச்சுறுத்தல்! இலங்கை அணுசக்தி அதிகார சபைத் தலைவர் தெரிவிப்பு

''இலங்கையிலிருந்து 200 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தமிழகத்தின் கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு அச்சுறுத்தல் உள்ளது'' என இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ''கூடங்குளம் அணு உலை தொடர்பில் இலங்கை – இந்திய அதிகாரிகளுக்கிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தை ஒன்று அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. கூடங்குளம் அணு உலையால் நமது நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அதனைத் தடுப்பது குறித்து இரு தரப்பும் கூடி ஆராயவுள்ளனர். இது தொடர்பில் ஒப்பந்தமொன்றையும் கைச்சாத்திட எண்ணியுள்ளோம். ஓப்பந்தத்தின் நகல் பிரதிகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் எமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜப்பான் புகுசிமா அணு உலை விவகாரத்தின் போது அதன் பாதிப்பைத் தடுக்க முக்கிய பங்காற்றிய நிபுணர் ஒருவர் இலங்கை வந்துள்ளார். அவர் எமக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். காலநிலைத் தன்மைக்கேற்பவே கூடங்குளம் அணு உலையினால் ஏற்படும் பாதிப்புக் குறித்துத் தெரிவிக்க முடியும். ஏற்கெனவே 5 முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 3 கோபுரங்கள் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கைக்கு கூடங்குள அணு உலையால் பாதிப்புக் குறைவாக இருந்தாலும், சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கூடங்குளம் அணு உலை எதிர்வரும் டிசம்பர் 1ம் திகதி முதல் முழுமையான மின் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளதாக இந்திய அணுசக்தி ஆணையகம் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், பாதுகாப்பற்ற நிலையில் கூடங்குளம் அணு உலையை செயற்பட அனுமதிக்கக்கூடாது எனப் போராட்டம் நடாத்தி வரும் மக்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம், முழுத் தமிழகத்தையும் கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது.

(கூடங்குளம் அணு உலையால் இலங்கைக்கும் ஆபத்து ஏற்படலாம் என, எமது 'வானவில்' ஆகஸ்ட் இதழில் சுட்டிக் காட்டியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்) *